IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)

An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# இமையம் சிறுகதைகளில் காணப்படும் நாட்டார் சமய மரபுகள்

நெறியாளர்

**ஏ. வீரப்பன்**
இணைப்பேராசிரியர்
தமிழியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்

**பி. இராமச்சந்திரன்**
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்

**ஆய்வுச் சுருக்கம்**

மனிதன் தனக்கு வாழத் தேவையான அனைத்தையும் சமூகத்தில் இருந்தே பெறுகிறான். இலக்கிய படைப்பாளனும் சமூகத்தின் ஓர் அங்கமாகவே விளங்குகிறான். அவன் படைக்கும் படைப்புகளும் அச்சமூகத்தில் இருந்தே பெறுகிறான். பழமையான சமுதாயத்தில் கவிதை, நடனம், ஓவியம் போன்ற கலைகளை மனிதன் தன் உழைப்போடு ஒட்டிய வாழ்வாகவே பெறுகிறான். அவை வாழ்வின் ஓர் அங்கமாகவே மிளிh;கிறது. காலப்போக்கில் வாழ்க்கை பன்முகம் கொண்டதாகவும், சிக்கலான ஒன்றாகவும் மாறிபோன நிலையில் இலக்கியங்களும், கலைகளும் பன்முக வடிவங்களைப் பெற்றன. தமிழ் இலக்கியங்கள் தமிழர் தம் வாழ்க்கையினை பிரதிபலிக்கும் காலக் கண்ணாடியாகவும், பண்பாட்டு, கலச்சாரத்தின் கருவூலமாகவும் திகழ்கின்றன. மக்களின் அக வாழ்க்கையினையும், புறவாழ்க்கையினையும் அறிவதற்கு சிறந்த மூலங்களாக இலக்கியங்கள் விளங்குகின்றன. இன்றைய சமூக சூழ்நிலையை எடுத்துக் காட்ட இக்கால நாவல், சிறுகதை, கவிதை போன்ற இலக்கியங்கள் அச்சாணியாக விளங்குகின்றன.

**சமயம் - விளக்கம்**

இந்திய சமூகத்திலும், இலக்கியத்திலும் சமயத்தின் இடம் புறக்கணிக்க இயலாத ஒன்றாக இருந்து வந்துள்ளது. கணினியுகமான தற்காலத்தில் அதன் இருப்பு கேள்விக்கு உள்ளாக்கப்பட முடியாத நிலையை காண்கிறோம். சமூக அமைப்பில் பண்பாடு என்பது உள்ளடங்கியுள்ள ஒன்றாகும். மதம், சமயம், கலை, இலக்கியம் முதலான கூறுகள் இதில் இணைந்துள்ளன.

சமூக உருவாக்கத்தில் மட்டுமின்றி மதத்தின் இருப்பிற்கு ஏதாவதொரு வகையில் இலக்கியமே மூலமாக அமைகிறது. ‘‘மதம் என்பது மூன்று அத்தியாவசிய அம்சங்களைக் கொண்டது. முதலாவது நம்பிக்கை (Faith) இரண்டாவது சடங்குகள் (Riduals) ஐதீகங்கள் (Myths) இவற்றின் வழியாக வளர்த்தெடுக்கப்பெறும் சமூகக் கண்ணோட்டம் அல்லது உலக நோக்கு இம்மூன்றும் ஒருங்கினையும் பண்பாட்டிலிருந்தும் இலக்கியத்திலிருந்தும் பிரித்து நோக்க முடியாது’’[1] என்று க.சிவத்தம்பி விளக்குகிறார்.

‘‘சமயத்தின் தோற்றம் பற்றி மிகச்சரியான ஒத்த கருத்து இதுவரை எட்டப்படவில்லை. இதுவரை கிடைத்திருக்கின்ற தொல்லியல் சான்றுகளின்படி, மேற்கு ஐரோப்பாவில் கடைப் பழங்காலத்தில் வாழ்ந்த ‘குரோமாக்னன்’ வாழிடப் பொருட்களே சமயம் தொடர்புடைய பண்டைய தரவுகளாகும். இவற்றின் அடிப்படையில் நோக்கினால் ஏறத்தாழ 70,000- 1,00,000 ஆண்டுகளுக்கு முன்னரே மனித சமூகத்தில் சமய நம்பிக்கை தோன்றிவிட்டது. அன்று முதல் இன்று வரை சமயம் என்பது அனைத்து சமூகங்களின் பண்பாட்டிலும் நிலைத்து விட்டது.’’[2] (ந. வானமாமலை - தமிழர் வரலாறும் பண்பாடும்

சமயத்தின் தோற்றுவாய்கள் பற்றிய மானிடவியல் சமூக அறிவியல் அறிஞர்களின் கருத்துக்கள் பல்வேறுபட்டதாக அமைகின்றன. இவற்றைத் தொகுத்து நோக்கினால் சிற்சில முக்கியமான கருத்தாக்கங்களை இனங்காணலாம்.

அவற்றுள் மூன்று வகையான அணுகுமுறைகளாக,

1. மனித எண்ணம் சார்ந்தது
2. உணர்வு சார்ந்தது
3. சமூகம் சார்ந்தது போன்றவை அமைகின்றன

'இதேபோல் சமயத் தோற்றம் பற்றிய முக்கிய கோட்பாடுகளாக.

1. ஆவி வழிபாடு (Animism)
2. உயிர்ப்பாற்றல் வழிபாடு (Animism)
3. இயற்கை வழிபாடு (Naturism)
4. குலக்குறி வழிபாடு (Totemism)
5. போலியுருவழிபாடு (Felishims)
6. முன்னோர் வழிபாடு(Ancestor worship)

போன்றவை வழங்கப்படுகின்றன. ''சமயத்தின் தோற்றக் காரணகள் பல்வகைப்பட்டதாக இருப்பினும் அவற்றுக்குரிய சமூக பொருளியல் அடிப்படைகளை நம்மால் புறக்கணித்துவிட முடியாது. ஏனெனில் சமய நெறிகளின் உருவ உள்ளடக்கம் போன்றவை மனிதரின் சமூக இருப்பிற்கு ஏற்பவும், வரலாற்று நிலைமகளுக்கு ஏற்பவுமே அமைந்து நிற்கும். மனித சமூகம் வர்க்கங்களாகப் பிளவுப்பட்டு, ஒன்றோடொன்று முரண்பட்டு நிற்பது போன்றே சமயங்களும் தத்தமது வர்க்கப் பின்புலத்தைக் கொண்டிருக்கும்''[3] (பக்தவத்சல பாரதி- மானுடவியல் கோட்பாடுகள்)

**நாட்டார் சமயம்**

தமிழ்ப் புனைகதைகளில் வட்டார மொழி எழுத்துக்கள் வலுவுடன் தோன்றி எழுபதுகளுக்குப் பின்பான பத்தாண்டுகளில் நாட்டார் பண்பாடும் சமயமும் கவனம் பெறலாயின அதுவரை புனைகதையுலகில் புறக்கணிக்கப்பட்டு வந்த நாட்டார் தெய்வங்கள் சிறுகதைகள் வழியே இடம்பெறத் தொடங்கின. பொதுமக்களின் வாய்மொழி மரபை முன்னிறுத்துவது ஒருவிதமான மாற்றுப் பண்பாட்டை முன்னெடுப்பதற்கான களமாக உணரப்பட்டது. கிராமப்புற வாழ்வியல் மீதான ஏக்கம். ஆதிக்க சாதி எதிர்ப்பு தாய்வழித் தலமைக்கான மீட்டுவாக்கம் போன்ற பல நோக்கங்களுக்காக நாட்டார் தெய்வங்களின் கதைகள் பயன்படுத்தப்பட்டன.

**நிறுவன சமயம் அற்றது**

'உண்மையில் நாட்டார் வழிபாட்டு நெறிகளை 'சமயம்' என்ற சொல்லால் சுட்டுவது தவறாகும்.' என்று தேலூர்து கருதுகின்றார். ஏனெனில் ''நாட்டார் வழிபாடு என்பது இறுக்கமான விதிகளால் நிறுவனமயம் ஆக்கப்பட்டதாகும். மேலும், அது ஒருமைப்பண்பு உடையதாகவும்

இல்லை பொதுவான பண்பைக் கொண்ட குழுவினரான நாட்டார் மக்களின் மரபு சார்ந்தது. அதிகார பூர்வமற்ற வழக்காற்று வகைமைகளின் ஒன்றாக அதன் வழிபாட்டு முறைகள் விளங்குவதால் இதனை நாட்டார் சமயம் என்பது பொருந்தாது”[4] என்று லூர்து கருதுகிறார். சமயப் பண்பற்றத் தத்துவங்களும் சமயம் என்ற சொல்லால் மரபாகச் சுட்டப்பட்டு வந்துள்ளன. இதன் காரணமாகவும் பிற சமய நெறிகளுடன் ஒப்பிட்டுக் காணும் வசதி கருதியும் இவ்வாய்வில் நாட்டார் சமயம் என்னும் சொற்றொடர் பயன்படுத்தப்படுகின்றது.

நாட்டார் சமய மரபு நிறுவனத்தன்மை அற்றது விளக்கியுள்ளோம். நாட்டார் சமயம் வெகுமக்களின் பங்களிப்போடு தனது இருப்பினைக் காத்துவந்துள்ளது. நாட்டார் சமயம் என்பது சாதி எனும் வடத்திற்குள் நின்றுருப்பினன்கூட அதை எளிமையாகத் தாண்டி நிற்கும் பண்பையும் கொண்டிருக்கும்.

நிறுவன சமயங்கள் அனைத்தும் ஒரு விதத்தில் ஆத்ம ஞானம் வீடுபோறு என்று இவ்வுலக வாழ்க்கையிலிருந்து தங்களைத் துண்டித்துக் கொள்பவையாக இருக்கின்றன. இவற்றுக்கு மாறாக நாட்டார் சமயமானது மண்ணுலக வாழ்வு மக்களின் சமூக உறவுகள். முரண்கள் பொருளியல் தேவைகள் போன்றவற்றை நிறைவு செய்ய உதவுபவையாக இருக்கின்றது.

**புனைவுகளில் நாட்டார் சமய மரபு**

தமிழ்ச் சமுதாயச் சூழலில் ஒடுக்கப்பட்ட மக்களைப் பற்றியும் வட்டார பின்புலங்களோடு எதார்த்தமான நடமாடும் மாந்தர்களை கதை பின்னனியாகக் கொண்டு புனைவுகள் படைப்பதில் குறிப்பிடத்தக்கவராக இமையம் திகழ்கிறார். அப்புனைவுகளில் நாட்டார் தெய்வங்களை மையமிட்டு நடைபெறும் நிகழ்வுகள் மிகுதியாகக் காணப்படுகின்றன.

மேட்டிமையோர் உருவாக்கும் புராணங்களுக்கு நாட்டார் சமயத் தெங்வங்களின் கதைகளுக்கும் இடையே சில அடிப்படையான வேறுபாடுகள் காணப்படுகின்றன. பெரும்பாலான வடமொழித் தழுவல் புராணங்களில் சொல்லப்படக்கூடிய கடவுளின் தோற்றம் தெய்வீகத் தோற்றமாகக் காணப்படும். எனவே அக்கடவுளர் புராணிகத் தெய்வங்கள் எனப்படுவர். ஆனால் நாட்டார் சமயத் தெய்வங்களின் தோற்றம் இந்த உலகில் சாதாரணமான வாழ்க்கைக்குத் தொடர்புடைய செய்திகளையே இக்கதைகள் பேசுவனவாய் இருக்கும்.

“குவாட்டரு பாட்டுலு, சிகரட்டு, எலுமிச்சங்கா. பூ பழமின்னு ஒனக்கு வேண்டிய எல்லாத்தையும் கொண்டாந்து படயல் போட்டுட்டன். எல்லாக் கருமாதியும் செஞ்சப்பின்னாலயும் எனக்கு ஏன் உத்தரவு கொடுக்க மாட்டங்குற? கைநெறையா பொருளு கெடைக்கணும்.

கேடைக்கறதிலதான் பாதியக் கொண்டாந்து ஒனக்கு சூலம், மணி, அங்கவஸ்திரம், கோழகாவு, குவாட்டரு பாட்டுலுன்னு கல்லு கருமாந்தரம் எடுக்குறனே, அப்பறம் என்ன? எனக்கு ஏன் உத்தரவு கொடுக்காம லேட்டாக்குற? போன வெள;ளிக் கிழம வேப்பூர் சந்தக்கிப் போனன். பாவப்பட்ட சனியந்தான் மாட்டிச்சி பாவப்பட்டதின்னு நெனைச்சா நான் எப்பிடிச் சோறு திங்குறது? ஏன் வவுறு மண்ணயா திங்கும்? ஒரு பவினுன்னு நெனச்சிக் கொண்டுபோயி கொடுத்தன். தேஞ்சிப்போச்சி மக்கிப்போச்சி முக்கா பவுனுதான் தேறுமன்னு சொன்னான். கையில காச வாங்குனன். மறுநாளு ஒனக்கு படயல் போட்டனா இல்லியா? நேரமாவறது பல்லியின் சத்தம் கேட்கிறதா என்று கவனமாகக் கேட்டான். சலிப்பு மேலிட 'சயனத் தடங்கலோட போவக் கூடாதின்னு ஒனக்குத் தொpயாதா? ' என்று கேட்டான்''[5]

நாட்டார் தெய்வங்களோடு நேரடியாக பேசும் தன்மை சக மனிதனிடம் பேசுவது போன்று உறையாவது. தன்னுடைய துன்பம், மகிழ்ச்சி போன்ற அனைத்தும் நிகழ்வையும் பங்கிட்டுக் கொள்ளுவது என்று சமமாக நினைத்து போற்றுவது போன்ற நிகழ்வை தமது கதைகளில் இமையம் பதிந்துள்ளார்.

நாட்டார் வழிபாடுகளில் மக்களே பூசாரியாக இருந்து செயல்படுவர். இறைச்சிமது போன்றவற்றை பலியிட்டுப் படைத்தல் தங்களுடைய வாய்வழியாக வந்த சொற்களைக் கொண்டு போற்றி புகழ்ந்து பாடுதல் தன் பரம்பரையாக முன்னோர்கள் இட்டு வணங்கியதினால் தாங்களும் வணங்குவது மனிதரிடம் தெய்வமாக இறங்கி அருள்வாக்குக் கூறுதல் போன்ற செயல்கள் நாட்டார் தெயவங்களிடம் காணப்படுகிறது.

''என்னா செய்யனும் சொல்லு நீ சொல்றது கருப்பையாகிட்டே இங்கு உள்ளத மட்டும்தான் சொல்லனும் இது சாமி குடிகொண்டிருக்கிற எட இந்தப் பய கோவக்காரன் துஷ்டன் ஆனா நல்லவங்களுக்கு மட்டும்தான் உவகாரம் செய்வான். ஈடு மருந்து விச்சியிருந்தாலும், எல்லாத்தையும் சாம்பலாக்கிப்புடுவா ஏவல், பில்லி, சூனியம் வைப்பு எடுக்கிறதிலியும் வைக்கிறதிலியும் பெரிய சூரன் இந்தப்பய, மத்தசாமி மாரி இல்லெ இவின். மாயஜாலக்காரன், நான் நில்லுன்னா நிப்பான். ஏன்னா இவ என்னோட எல்லெ என்னோட உத்தரவு இல்லாம அவன் இந்த எல்லயத் தாண்ட முடியாது. எங்கமுப்பாட்டன் குமாரயிலிருந்து இந்த ஊருக்கு வரும்போது குலசாமின்னு கருப்பையாவைம் கொண்டாந்து, குடிவச்சாரு, அதனால என்னோட ஏவல்ல அவன் நின்னாவனும் என்னா ஒண்ணு, ரத்தவெறி புடிச்ச பய பலி கேப்பான் அவ்வளவுதான். அவனுக்கு வேண்டியதக் கொடுத்திட்ட நாம்ப சொல்ற மீற மாட்டான்''[6] (இமையம் - கொலைச்சேவல்)

நாட்டார் சமய மரபு ஆளுவோரால் ஆதரிக்கப்படாமல் வரலாறு தோறும் ஒடுக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டு வந்துள்ளது. மேட்டுமையோர் தங்களின் மரபை நாகரிகமுடையதாகவும். நாட்டார் மரபைக் காட்டுமிராண்டித்தனம். மூடநம்பிக்கை உடையது என்று ஒதுக்கியும் வந்துள்ளதைக் காணமுடிகிறது. சமகாலத்தில் கூடக் கிராம கோவில்களில் உயிர்பலிக்குத் தடை ஜல்லிக்கட்டு விளையாட்டுத் தடை என்பன போன்ற ஆதிக்க, ஒடுக்குதல்களை நாட்டார் சமய மரபு சந்தித்துள்ளது. உண்மையில் நாட்டார் சமய மரபு அதிகாரமற்றவர்களின் குரலாக வெளிப்படும் பண்புடையது. ஒருங்கிணைக்கப்படாத சமய நெறியாகவும், பன்மை அடையாளங்களின் குரலாகவும் விளங்குகின்றது.

**தாய் தெய்வ வழிபாடு**

நிறுவன சமயங்கள் பெண்ணை இரண்டாம் தரமானவர்களாகவும், இழிந்த அடையாளமாகவுமே பார்த்து வந்துள்ளனர். ஆனால் நாட்டார் மரபிலோ வழிபடும் தெய்வங்களில் மிகப்பெரும்பாலான தெய்வங்கள் பெண் தெய்வங்களாகவே காண முடிகிறது. இதனை அறிஞர்கள் பலர் எடுத்துக்கூறியுள்ளனர்.

வீடியோ மாரியம்மன் சிறுகதைத் தொகுப்பில் சாதிய பெயரால் கொலை செய்யப்பட்ட ஒடுக்கப்பட்ட பெண்ணை உயர் சாதிக்காரர்களும் தெய்வமாக வணங்கும் நிகழ்வை

“பொன்னருவியினுடைய சாபத்திலிருந்து கோபத்திலிருந்து தப்பிப்பதற்கு வழி தேடுமாறு பெண்கள் புலம்ப ஆரம்பித்ததோடு அவர்களே பொங்கல் வைத்துப் படைத்தால் அவளுடைய கோபம் தணியும் என்று சொன்னார்கள். அதனால், ஊர்ப் பஞ்சாயத்து கூடியது. பஞ்சாயத்தில் ஒரு ஆள் தவறாமல் எல்லோருமே பொங்கல் வைத்துப் படைக்கலாம் என்று சொன்னார்கள். சிவன் கோவிலுக்கு எதிரிலுள்ள வீட்டுக்காரரான சிதம்பரம் பிள்ளை மட்டும் ‘பறச்சிய எப்பிடியே சாமி ஆக்கிட்டீங்க’ என்று சொன்னார். அவருடைய பேச்சு பஞ்சாயத்தில் எடுபடவில்லை. குடித் தெருக்காரர்கள் பொங்கல் வைத்துப் படைக்க முடியாது. அதனால் பொன்னருவியினுடைய சொந்தக்காரர்களிடமே அந்தப் பொறுப்பை ஒப்படைக்கலாம் என்றும் பஞ்சாயத்தில் முடிவாகியது. பஞ்சாயத்தில் முடிவானபடிதான் பொட்டைக்குளக் கரையில் பொன்னருவிக்கு முதல் பொங்கல் படைத்தது”[7] இமையம் (வீடியோ மாரியம்மன் பக்-119) (நாட்டார் மரபில் சாதிய, பெண் வர்க்க ஒடுக்குமுறைக்கான கூறுகள் இருப்பினும் அவை சிறுபான்மை என்ற அளவிலேயே உள்ளது. அவை நிறுவனச் சமங்களில் உள்ளது போன்று இறுக்கமான அதிகார அமைப்பைப் பெற்றிருக்கவில்லை என்பதை அறியலாம்.

**தொகுப்புரை**

இந்தியப் பண்பாட்டில் மற்றெந்த சமய நெறிகளைவிட மிகத் தொன்மையானதாகவும் இன்று வரையிலான தொடர்ச்சி உடையதாகவும் நாட்டார் சமயமே திகழ்கின்றது. நிறுவனத்தன்மை அடையாத எழுத்து மரபைச்சாராத வெகுமக்களின் சமயமாக நாட்டார் வழிபாட்டுமுறைகள் இருக்கின்றன. வேதத்தலைமையோ ஆகம வழிபாடுகளோ இன்றிப் பிராமணல்லாத எல்லாச் சாதியினரும் பின்பற்றும் நெறியாகவும் நாட்டார் சமயம் உள்ளது. ஒற்றை அறை, ஒரு சூலம், ஒருகல், சிலை என ஏதுவாகிலும் கொண்ட எளிய வழிபாட்டிடமே அதன் கோயில் எனக் கருதப்படும். நாட்டார் தெய்வங்கள் மக்களிடம் நேரடியாக உறவாடும் தன்மை கொண்டவையாக உள்ளன. நாட்டார் தெய்வங்கள் பெரும்பாலும் முன்னோர் வழிபாட்டிலிருந்து உதிர்ந்தவையாக இருக்கின்றன. எனவே அவற்றின் பெயர்களும் அடித்தட்டு மக்களின் கருப்பன், வீரன், ஐயா போன்ற பெயர்களாக உள்ளதை காண முடிகிறது. நாட்டார் சமய மரபு சனநாயகப் பண்பு மிகுந்து காணப்படுகிறது. இதனால்தான் அவை அதிகாரத்திற்கு எதிரான குரல்களை தன்னகத்தே நிறைத்து வைத்திருப்பதை அறியலாம்.

**சான்றொன் விளக்கம்**


1. கா. சிவதம்பி தமிழிலக்கியத்தில் மதமும் மானுடமும் இலக்கிய வரலாற்றாய்வு
2. நா. வானமாமலை - தமிழர் வரலாறும் பண்பாடு
3. பக்தவச்சல பாரதி - மானுடவியல் கோட்பாடுகள்
4. லூர்து சாமி - நாட்டார் தெய்வம் வரையறைகளும் அடையாள மயக்கமும் சனங்களின் சாமிகள் நூலிலுள்ள கட்டுரை
5. இமையம் - சாவு சோறு
6. இமையம் - வீடியோ மாரியம்மன்
7. இமையம் - கொலைச் சேவல்